## குடியரசு தின விழா, ஒத்திகை நிகழ்ச்சி

# சென்னை மெரினா காமராஜர் சாலையில் 4 நாட்கள் போக்குவரத்து மாற்றம்

சென்னை, ஜன.18–

சென்னை மெரினா காமராஜர் சாலையில் குடியரசு தின விழா மற்றும் ஒத்திகை நிகழ்ச்சிக்காக 4 நாட்கள் போக்குவரத்து மாற்றம் செய்யப்படுகிறது.

நம் நாட்டின் குடியரசு தின விழா வருகிற 26ந்தேதி (வியாழக்கிழமை) அன்று கொண்டாடப்படுகிறது. வழக்கமாக சென்னையில் மெரினா கடற்கரை காமராஜர் சாலையில் அமைந்துள்ள காந்தி சிலை அருகே குடியரசு தின விழா கொண்டாட்டங்கள் நடைபெறும். தற்போது அந்த இடத்தில் மெட்ரோ ரெயில் பணி நடைபெறுவதால் இந்த ஆண்டு உழைப்பாளர் சிலை அருகே குடியரசு தின விழா கொண்டாட்டங்கள் நடைபெற உள்ளது. எனவே இந்த சாலையில் 4 நாட்கள் போக்குவரத்து மாற்றம் செய்யப்பட உள்ளது.

இதுதொடர்பாக சென்னை போக்குவரத்து போலீசார் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

குடியரசு தினவிழா கொண்டாட்டம் வருகிற 26ந்தேதி காமராஜர் சாலையில் உழைப்பாளர் சிலை அருகில் கொண்டாடப்பட இருக்கிறது. இதனை முன்னிட்டு 20, 22 மற்றும் 24 ஆகிய 3 நாட்கள் ஒத்திகை நிகழ்ச்சி நடைபெற உள்ளது. எனவே 26ந்தேதி மற்றும் ஒத்திகை நடைபெறும் 3 நாட்கள் என 4 நாட்கள் போக்குவரத்து மாற்று ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

★ இந்த 4 நாட்கள் காமராஜர் சாலையில் காந்தி சிலை முதல் போர் நினைவுச் சின்னம் வரை காலை 6 மணி முதல் நிகழ்ச்சி முடியும் வரை வாகனங்கள் அனுமதிக்கப்பட மாட்டாது.

★ அண்ணாசதுக்கம் அருகில் உள்ள பஸ் நிறுத்தம் தற்காலிகமாக சிந்தாதிரிப்பேட்டை ரெயில் நிலையம் அருகில் மாற்றப்படும்.

★ அடையாறு பகுதியிலிருந்து காமராஜர் சாலையில் பிராட்வே நோக்கி செல்லும் சரக்கு மற்றும் வணிக வாகனங்கள் கிரீன்வேஸ் சாலை சந்திப்பிலிருந்து ஆர். கே.மடம் சாலை, வி.கே. ஐயர் சாலை, தேவநாதன் சாலை, செயின்ட் மேரிஸ் சாலை, ராமகிருஷ்ணா மடம் சாலை, லஸ் சந்திப்பு, லஸ் சர்ச் சாலை, கற்பகாம்பாள் நகர், சிவசாமி சாலை, அண்ணா சாலை வழியாக பிராட்வே சென்றடையலாம்.

★ அடையாறு பகுதியிலிருந்து காமராஜர் சாலையில் பிராட்வே நோக்கி செல்லும் பிற வாகனங்கள், (மாநகர பஸ்கள் உள்பட) காந்தி சிலை சந்திப்பில் ராதாகிருஷ்ணன் சாலை நோக்கி திருப்பப்படும். ராயப்பேட்டை ஒன் பாயிண்ட், ராயப்பேட்டை ஆஸ்பத்திரி, ராயப்பேட்டை மணிக்கூண்டு, ஜெனரல் பீட்டர்ஸ் ரோடு, அண்ணாசாலை வழியாக பிராட்வே சென்றடையலாம்.

★ மயிலாப்பூர் சந்திப்பிலிருந்து சிவசாமி சாலை வழியாக காந்தி சிலை நோக்கி வரும் மாநகர பஸ் வழித்தடம் எண்21ஜி ராயப்பேட்டை நெடுஞ்சாலை, ராயப்பேட்டை மேம்பாலம் நோக்கி திருப்பி விடப்பட்டு, அவை ராயப்பேட்டை மேம்பாலம், ராயப்பேட்டை நெடுஞ்சாலை, ராயப்பேட்டை மணிக்கூண்டு, ஜெனரல் பேட்டர்ஸ் ரோடு, அண்ணாசாலை வழியாக பிராட்வே செல்லலாம்.

**அவ்வை சண்முகம் சாலை சந்திப்பு**

★ மயிலாப்பூர் சந்திப்பிலிருந்து சிவசாமி சாலை வழியாக அண்ணாசதுக்கம் நோக்கி வரும் மாநகர பஸ் வழித்தடம் எண் 45பி மற்றும் 12 ஜி ஆகியவை நீல்கிரிஸ் சந்திப்பு, மியூசிக் அகாடமி, ராயபேட்டை ஆஸ்பத்திரி, ராயப்பேட்டை மணிக்கூண்டு, ஜெனரல் பேட்டர்ஸ் ரோடு, அண்ணாசாலை, வழியாக தற்காலிக பஸ் நிறுத்தமான சிந்தாதரிப்பேட்டை ரெயில் நிலையம் செல்லலாம்.

★ டாக்டர் நடேசன் சாலை மற்றும் அவ்வை சண்முகம் சாலை சந்திப்பு வழியாக காமராஜர் சாலை நோக்கி வரும் வாகனங்கள் ஐஸ் அவுஸ் சந்திப்பு நோக்கி திருப்பி விடப்படும்.

★ டாக்டர் பெசன்ட் சாலையிலிருந்து காமராஜர் சாலை நோக்கி வரும் வாகனங்கள் பெசன்ட் சாலை ரவுண்டானாவில் ஐஸ் அவுஸ் நோக்கி திருப்பி விடப்படும்.

★ பாரதி சாலை மற்றும் பெல்ஸ் ரோடு சந்திப்பில் காமராஜர் சாலை நோக்கி வரும் வாகனங்கள் பாரதி சாலை மற்றும் பெல்ஸ் ரோடு சந்திப்பில் பெல்ஸ் ரோடு நோக்கி திருப்பி அனுப்பப்படும்.

★ வாலாஜா சாலை மற்றும் பெல்ஸ் ரோடு சந்திப்பில் உழைப்பாளர் சிலை நோக்கி வரும் வாகனங்கள் (மாநகர பஸ் தவிர்த்து) பெல்ஸ் ரோடு வழியாக திருப்பி அனுப்பப்படும்.

★ பாரிமுனையிலிருந்து ராஜாஜி சாலை மற்றும் காமராஜர் சாலை வழியாக அடையாறு நோக்கி செல்லும் அனைத்து வாகனங்களும் ரிசர்வ் வங்கி சுரங்கப்பாதையில் திருப்பி விடப்பட்டு ராஜா அண்ணாமலை மன்றம் வழியாக வாலாஜா பாயிண்ட், அண்ணாசாலை, அண்ணாசிலை, ஜீ.பி.ரோடு, ராயபேட்டை மணிகூண்டு, வெஸ்ட் காட் சாலை, ராயபேட்டை ஒன் பாயிண்ட், நடேசன் சாலை, காரணீஸ்வரர் பகோடா தெரு, சாந்தோம் சாலை வழியாக அடையாறு சென்றடையலாம்.

★ வாலாஜா பாயிண்ட் மற்றும் அண்ணா சாலை சந்திப்பிலிருந்து போர் நினைவுச் சின்னம் நோக்கி வாகனங்கள் வர அனுமதியில்லை.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலினை, தலைமைச் செயலகத்தில் இந்தியாவிற்கான ஜப்பான் நாட்டுத் தூதர் சுசூகி ஹிரோஷி சந்தித்துப் பேசினார். தலைமைச் செயலாளர் வெ.இறையன்பு, பொதுத்துறை செயலாளர் டி.ஜகந்நாதன், சென்னையிலுள்ள ஜப்பான் நாட்டு தூதரகத்தின் துணைத் தூதர் டாகா மசாயுகி, புதுடெல்லியிலுள்ள ஜப்பான் நாட்டு தூதரகத்தின் செயலாளர் ஹோம்மா மாயு மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.

# ஏகாம்பரநாதர் கோவிலில் பார்வேட்டை உற்சவம்

காஞ்சீபுரம், ஜன.18–

உலக பிரசித்தி பெற்றதும், பஞ்ச பூதங்களில் மண் ஸ்தலமாக விளங்கக்கூடிய காஞ்சீபுரம் ஏலவார்குழலி உடனுறை ஸ்ரீ ஏகாம்பரநாதர் கோவிலில் பார்வேட்டை உற்சவமானது நேற்று திருக்கோவிலிருந்து புறப்பட்டு திம்மசமுத்திரம் கிராமத்தில் எழுந்தருளி வெகுவிமர்சையாக நடைபெற்றது.

அதையொட்டி நேற்றுஅதிகாலை ஏகாம்பரநாதர் மூலவருக்கு சிறப்பு அபிஷேகம் நடைபெற்றது. இதையடுத்து, கோவில் ராஜகோபுரத்துக்கு முன்பு உற்சவர் ஏலவார்குழலி அம்மன், உற்சவர் ஏகாம்பரநாதருக்கு சிறப்பு பூஜைகள், அலங்காரம் செய்யப்பட்டு திம்மசமுத்திரத்துக்கு பல்லக்கில் புறப்பட்டனர். அப்போது 1008 சிவ மேளங்கள், நாதஸ்வர இசை, கரகாட்டம், மயிலாட்டம், கோலாட்டம், மாடு ஆட்டம், தாரை தப்பட்டை, பேண்டு வாத்தியங்கள் போன்ற பல்வேறு இசைகள் முழங்க கலைக்குழுவினர் தங்களது வாத்திய கருவிகளுடன் உற்சவருக்கு முன் ஆடி, பாடி, நடனமாடினர். இதில் சுற்றுலா பயணிகளும் கூட நடனமாடினார்கள்.



பார்வேட்டை உற்சவத்தையொட்டி ஏராளமான பக்தர்கள் வழிநெடுகிலும் சாமி தரிசனம் செய்தனர். பெரியவர்கள் முதல் சிறுவர்கள் வரை வழி நெடுகிலும் சாலைகளில் பச்சரிசி மாவினால் கோலமிட்டு வரவேற்றனர்.

இந்த பார்வேட்டைஉற்சவம் நடைபெறக்கூடிய திம்மசமுத்திரம் திரிபுராந்தகேஸ்வரர் கோவிலுக்கு பக்தர்களின் ஆரவார வரவேற்புகளுக்கு மத்தியில் ஏகாம்பரநாதர் சென்றடைந்தார். இதனைத்தொடர்ந்து ஏகாம்பரநாதர் மற்றும் ஏலவார்குழலி அம்மையார் உற்சவருக்கு 1008 இளநீர், 365 லிட்டர் பால், 108 லிட்டர் தயிர், 63 லிட்டர் கரும்புச் சாறு, 27 லிட்டர் தேன், 27 லிட்டர் பன்னீர், 27 வகையான பழங்கள், 27 வகையான மலர்கள், 12 கிலோ சந்தனம், 12 கிலோ திருநீறு, 9 வகையான திரவியங்கள், 9 லிட்டர் எலுமிச்சை பழச்சாறு உள்ளிட்டவைகளை கொண்டு சிறப்பு மஹா அபிஷேகம் நடைபெற்றது.

அதனைத் தொடர்ந்து திம்ம சமுத்திரத்திலிருந்து உற்சவருக்கு உபசார தீபாராதனைகள் முடிந்த பின் இரவு ஏகாம்பரநாதர் கோயிலுக்கு உற்சவர் வந்தடைந்தார்.

இந்த பார்வேட்டை உற்சவத்தைக் காண காஞ்சீபுரம் மட்டுமின்றி சுற்றியுள்ள பகுதிகளிலிருந்து ஆயிரக் கணக்கானோர் வருகை தந்து சாமி தரிசனம் மேற்கொண்டனர்.

மேலும் பக்தர்களின் பாதுகாப்பிற் காகவும், எவ்வித அசம்பாவிதமும் நடைபெறாமல் தடுக்கும் பொருட்டு 100க்கும் மேற்பட்ட போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டனர். மாநகர பகுதிகளில் போக்குவரத்தில் ஒரு சில மாற்றங்களும் செய்யப்பட்டது.

## சொந்த ஊரில் பொங்கல் பண்டிகையை கொண்டாடிவிட்டு சென்னை திரும்பும் மக்கள்

# பரனூர் சுங்கச் சாவடியில் கடும் போக்குவரத்து நெரிசல்: கட்டணமின்றி வாகனங்கள் அனுமதி

செங்கல்பட்டு, ஜன. 18–

சொந்தஊரில்பொங்கல்கொண்டாடி விட்டு சென்னை திரும்பும் மக்களால் பரனூர் சுங்கச்சாவடியில் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டதால் கட்டணமின்றி வாகனங்கள் செல்ல அனுமதிக்கப்பட்டன.

பொங்கல் பண்டிகை தொடர் விடுமுறையை முன்னிட்டு சென்னையில் இருந்து தென் மாவட்டம் உள்ளிட்ட தமிழகத்தின் பல்வேறு ஊர்களுக்கு 6 லட்சம் பேர் சென்றனர். சொந்த ஊரில் தங்களது குடும்பத்தினருடன் பொங்கல் பண்டிகையை மகிழ்ச்சியுடன் கொண்டாடினர்.

சொந்த ஊர் சென்றவர்கள் விடுமுறை முடிந்து சென்னை திரும்பிட வசதியாக அரசு போக்குவரத்து கழகம் சார்பில் கடந்த 16ந் தேதி முதல் இன்று வரை 3 நாட்களுக்கு வழக்கமான பஸ்களுடன் சிறப்பு பஸ்கள் என மொத்தம் 15,619 பஸ்கள் இயக்கப்பட்டு வருகிறது.

இன்று பள்ளி கல்லூரிகள், அரசு மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு வேலை நாள் என்பதால் நேற்று மாலை முதல் ஏராளமானோர் குடும்பத்துடன் சென்னை நோக்கி திரும்பி வரத்தொடங்கினர். இன்று அதிகாலை முதல் ஏராளமான பஸ், கார்கள் சென்னை நோக்கி வரத்தொடங்கியதால் அனைத்து சுங்கச்சாவடிகளிலும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. சென்னையின் நுழைவு வாயிலாக உள்ள செங்கல்பட்டு அருகே உள்ள பரனூர் சுங்கச்சாவடியில் அதிகாலையில் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. சுங்ககட்டணம் செலுத்துவதற்காக வாகனங்கள் பல கிலோ மீட்டர் தூரத்துக்கு அணி வகுத்து நின்றன. இதைத்தொடர்ந்து சுங்கக்கட்டணம் செலுத்தாமல் வாகனங்கள் செல்ல அனுமதிக்கப்பட்டன.

இதன்பின்னர் போக்குவரத்து நெரிசல் மெல்ல மெல்ல சீரானது. செங்கல்பட்டு மாவட்ட போலீசார் பரனூர் சுங்கச்சாவடி பகுதியில் அதிகாலை முதல் போக்குவரத்து நெரிசலை ஒழுங்குபடுத்தும் பணியில் ஈடுபட்டனர். வெளியூர்களில் இருந்து வரும் ஆம்னி பஸ்கள் வண்டலூர் – மீஞ்சூர் வெளிவட்ட சாலையில் செல்ல ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது. அரசு பஸ்கள் மதுரவாயல் பைபாஸ் சாலை வழியாக சென்றன.

## நிச்சயதார்த்த விழாவுக்கு சென்றபோது

# மானாமதுரை அருகே மோட்டார் சைக்கிள் மீது கார் மோதல்: கணவன், மனைவி பலி

**மானாமதுரை, ஜன.18–**

**மானாமதுரை அருகே இருசக்கர வாகனம் மீது கார் மோதிய விபத்தில் கணவன், மனைவி பலியானார்கள்.**



சிவகங்கை மாவட்டம் மானாமதுரை அருகே உள்ள மிளகனூர் கிராமத்தைச் சேர்ந்தவர் ராஜாமணி (60). இவரது மனைவி கஸ்தூரி (54). இவர்கள் இருவரும் இருசக்கர வாகனத்தில் மானாமதுரை அருகே உள்ள தீயனூரில் நடைபெறும் நிச்சயதார்த்த விழாவிற்காக சென்று கொண்டிருந்தனர்.

தீயனூர் விலக்கு அருகே சென்று கொண்டிருந்த போது பின்னால் வந்த கார் திடீரனே இருசக்கர வாகனம் மீது மோதியது.

இதில் நிலைதடுமாறி ராஜாமணி மற்றும் அவரது மனைவி கஸ்தூரி ஆகியோர் கீழே விழுந்து ரத்த வெள்ளத்தில் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தனர்.

விபத்து குறித்து மானாமதுரை போலீசார் வழக்கு பதிவு செய்து, இருவரது உடல்களையும் மீட்டு சிவகங்கை அரசு மருத்துவமனைக்கு பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்து, விசாரணை நடத்தி வருகின்றனர்.

# படபிடிப்புக்கு 40 அடி உயரத்தில் பணியாற்றியவர் தவறி விழுந்து மரணம்

சென்னை, ஜன. 18–

படப்பிடிப்புக்காக மின் விளக்குகளை பொருத்தும் பணியில் ஈடுபட்டிருந்த லைட்மேன் 40 அடி உயரத்திலிருந்து தவறி விழுந்து உயிரிழந்தார்.

இசையமைப்பாளர் ஏ.ஆர். ரகுமானுக்கு திருவள்ளூர் மாவட்டம் கும்மிடிப்பூண்டி கவரைப்பேட்டையில் ஏ.ஆர். பிலிம் சிட்டி (AR FilmCity) என்ற பெயரில் ஸ்டுடியோ உள்ளது. இங்கே ஒரு சில படப்பிடிப்புகள் அவ்வப்போது நடைபெறுவது வழக்கம். அந்த வகையில் சத்யராஜ் நடிக்கும் 'வெப்பன்' படத்திற்கான படப்பிடிப்புக்கு ஸ்டுடியோவில் செட் போடப்பட்டு வருகிறது. இதற்காக சாலிகிராமத்தைச் சேர்ந்த லைட்மேன் குமார் (47) என்பவர் பணியாற்றி வருகிறார்.

இந்த நிலையில், படப்பிடிப்பிற்காக லைட்மேன் குமார் இன்று காலை 40 அடி உயரத்தில் மின் விளக்குகளை பொருத்தும்பணியில்ஈடுபட்டிருந்தார். அப்போது திடீரென கால் தடுக்கி மேலிருந்து கீழே தவறி விழுந்தார். உடனே அவரை சிகிச்சைக்காக பொன்னேரி அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். அங்கு அவரை பரிசோதித்த மருத்துவர்கள் வழியிலேயே இறந்துவிட்டதாக கூறியுள்ளனர். இதனையடுத்து அவரது உடல் பிரேத பரசோதனைக்காக பொன்னேரி அரசு மருத்துவமனையில் அனுப்பி வைக்கப்பட்டது. கவரைப்பேட்டை போலீசார் வழக்கு பதிவு செய்து மேலும் விசாரணை நடத்தி வருகின்றனர்.



எம்.ஜி.ஆரின் 106 வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு ஆயிரம் விளக்கு பகுதி, 110 வது வார்டு, நுங்கம்பாக்கம் புஷ்பா நகர் ஸ்ரீதேவி கருமாரியம்மன் ஆலய வளாகத்தில் கழக பொதுக்குழு உறுப்பினர் புஷ்பா நகர் என்.ஆறுமுகம் ஏற்பாட்டின் பேரில் நடைபெற்ற நிகழ்ச்சியில் எம்.ஜி.ஆர். படத்திற்கு மாலை அணிவிக்கப்பட்டது. நிகழ்ச்சியில் கழக இலக்கிய அணி இணை செயலாளர் டி.சிவராஜ், ஆயிரம் விளக்கு (வ) பகுதி கழக செயலாளர் நுங்கை எஸ். செல்வக்குமார், நுங்கை என்.மூர்த்தி, 110 வது தெற்கு வட்டக் கழகச் செயலாளர் கேபிள் டிவி ஆர்.மாரி, ஆயிரம் விளக்கு பகுதி சிறுபான்மையினர் நலப் பிரிவு செயலாளர் ஆடியோ வி.சி. ரஹீம், முன் 111 வது வட்ட கழக செயலாளர் தேனை எம்.ரமேஷ், முன்னாள் 113 வது வட்ட கழக செயலாளர் வி.ஏ.மகேஷ், முன்னாள் 113 வது வட்ட கழக அவைத்தலைவர் கோ.தட்சிணாமூர்த்தி, த.செல்வதுரை, மேனஜர் வெங்கடேசன், எம்.பழனி, எம்.சாமிக்கண்ணு, எஸ். கே.செல்வம், நுங்கை ரஞ்சித், வாட்டர் மணி உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.


**பெயர் மாற்றம்**

Lakshmipathy, தந்தை பெயர்: Bhakthavatsalam பிறந்த தேதி: 07.01.1971, நெ.23, பொன்னியம்மன் கோவில் தெரு, ஜெயலட்சுமி நகர், புதூர், திருமுல்லைவாயல் அஞ்சல், திருவள்ளூர் – 600 062, என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **Given Name: Lakshmipathy Sur Name: Bkakthavatsalam,** என்று அழைக்கப்படுகிறேன்.

Lakshmipathy

**பெயர் மாற்றம்**

ROY, தந்தை பெயர்: George, பிறந்த தேதி: 26.05.1986, நெ.2, G1, ஸ்ரீ ஐஸ்வர்யம் ஹோம்ஸ், ராதா நகர், உள்ளகரம், மடிப்பாக்கம், சென்னை–600 091, என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **Roy George Saleenamabel,** என்று அழைக்கப்படுகிறேன்.

ROY

**அசல் நிலம்/சொத்து ஆவணம் காணவில்லை**

சென்னை–600097, காரப்பாக்கம், மகாத்மாகாந்தி தெரு, நெ.3/206 என்ற முகவரியில் வசித்து வரும் திரு. ரங்கசாமி நாயக்கர் என்பவரின் குமாரர் சுமார் 44 வயதுடைய R. சிவா (ஆதார் அட்டை எண்.3978 0194 7780 ஆகிய நான் இதன் மூலம் பொது மக்களுக்கு தெரிவித்துக் கொள்வது யாதெனில், நீலாங்கரை சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள அசையா சொத்து சம்பந்தப்பட்ட கிரைய பத்திரம் ஆவண எண்.2780/2006 தேதி 03.05.2006 தொலைந்து விட்டது. யாரேனும் அதனைக் கண்டுபிடித்தால் எனது 9940530982 கைப்பேசி எண்ணிற்கு அல்லது கீழ்கண்ட முகவரிக்கு தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**R. சிவா, த/பெ. ரங்கசாமி நாயக்கர்**
**நெ.3/206, மகாத்மாகாந்தி தெரு,**
**காரப்பாக்கம்,**
**சென்னை–600097,**
**கைப்பேசி எண் : 9940530982**

**வருவாய் கோட்டாட்சியர்**
**மத்திய சென்னை கோட்டம்**
**ந.க.எண்அ6 /1175/2022**
**நாள்:10.01.2023**
**பிறப்பு சான்று**

முகவரி: மஞ்சுளா,
நெ.29, பாரதீஸ்வரர் காலனி,
2வது தெரு, கோடம்பாக்கம்,
சென்னை– 600 024. – மனுதாரர்
எதிராக
வருவாய் கோட்ட அலுவலர்,
கோட்டாட்சியர் அலுவலகம்,
சென்னை – எதிர்மனுதாரர்

**அறிவிப்பு**

மேற்படி மனுதாரரின் மகன் நந்தகுமார் என்பவர் மேற்படி கடந்த 24.12.1978 தேதியன்று நெ.29, பாரதீஸ்வரர் காலனி, 2வது தெரு, கோடம்பாக்கம், சென்னை – 600 024. என்ற விலாசத்தில் பிறந்ததை பதிவு செய்யாமல் விடுபட்டதால், அந்த பிறப்பை எதிர்மனுதாரர் அலுவலகத்தில் பதிவு செய்ய உத்தரவு வழங்க கோரி மனுதாக்கல் செய்துள்ளார். இதன் மீது எவருக்கேனும் ஆட்சேபணை இருப்பின் இந்த விளம்பரம் கண்ட 15 நாட்களுக்குள் கிண்டி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் நேரில் ஆஜராகி எழுத்து மூலம் தங்களது ஆட்சேபணையை தெரிவிக்கலாம். தவறும் பட்சத்தில் மனு ஒருதலைப்பட்சமாக தீர்மானிக்கப்பட்டு உத்தரவு பிறப்பிக்கப்படும் என்பதை அறியவும்.

வருவாய் கோட்டாட்சியர்
மத்திய சென்னை கோட்டம்,
சென்னை.

**IN THE COURT OF ADDL DISTRICT MUNSIF AT ALANDUR**
**O.S. NO. 320 of 2021**

**S. Pandurangan ...Plaintiff**
**Versus**
**Govindarajan ...Defendant**

**NOTICE**

**To**
**Govindarajan,**
No.11, A C Quarters
Poonamallee High Road,
Kilpauk, Chennai-600 010

**Sir/Madam,**

Please take notice that my client S.Pandurangan, the plaintiff above named, has filed the above suit against you in O.S.No.320 of 2021 before the Hon'ble Addl District Munsif, Alandur for injunction. The case is coming up on **21.02.2023** for your appearance. Hence you are hereby directed to appear in person or through your pleader before the Hon'ble Addl District Munsif, Alandur, **on 21.02.2023 at 10 a.m** and submit your reply or objections thereto, failing which the matter will be decided in your absence.

**Dated at Chennai this the 13th day of January 2023**

**Sashikumar.S**
**Daphne Emelda.G**
Counsel for Plaintiff
8825724588

**IN THE COURT OF ADDL DISTRICT MUNSIF AT ALANDUR**
**I.A.No.574 of 2021**
**In**
**O.S. No.320 of 2021**

**S. Pandurangan ...Petitioner/Plaintiff**
**Versus**
**Govindarajan**
**...Respondent / Defendant**

**NOTICE**

**To**
**Govindarajan,**
No.11, A C Quarters
Poonamallee High Road,
Kilpauk, Chennai-600 010

**Sir/Madam,**

Please take notice that my client S.Pandurangan, the plaintiff above named, has filed the above suit against you in O.S.No.320 of 2021 before the Hon'ble Addl District Munsif, Alandur for injunction and also I.A.No.574/2021 for interim injunction. The case is coming up on 21.02.2023 for your appearance. Hence you are hereby directed to appear in person or through your pleader before the Hon'ble Addl District Munsif, Alandur, **on 21.02.2023 at 10 a.m** and submit your reply or objections thereto in I.A.No.574/2021, failing which the matter will be decided in your absence.

**Dated at Chennai this the 13th Day of January 2023.**

**Sashikumar.S**
**Daphne Emelda.G**
Counsel for Plaintiff
8825724588

**சதர்ன் லாடெக்ஸ் லிமிடெட்**
CIN: L25199TN1989PLC017137
**பதிவு அலுவலகம்:** B-11/W, சிப்காட் தொழிற்பேட்டை வளாகம், கும்மிடிப்பூண்டி 601 201
**கார்ப்பரேட் அலுவலகம்:** எண்.66, நியூ ஆவடி ரோடு, 2வது தளம், எஸ்2 குறிஞ்சி அபார்ட்மெண்ட்ஸ், சென்னை 600 010
Tel:+91 44 2660 1313
E-mail: southernlatexltd@yahoo.com,
Website: www.southernlatex.in

**அறிவிப்பு**

செபி (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீடு தேவைகள்) கட்டுப்பாடுகள் 2015ன் கட்டுப்பாடு 29(1)(எ) மற்றும் கட்டுப்பாடு 47ன்படி, இதர அலுவல்களுக்கு இடையே, 31 டிசம்பர் 2022–ல் முடிந்த காலாண்டுக்கான தணிக்கை செய்யப்பட்ட நிதிநிலை முடிவுகளை பரிசீலிக்க கம்பெனி இயக்குனர்கள் குழு கூட்டம் **புதன்கிழமை, 25 ஜனவரி 2023 அன்று மதியம் 2.00 மணிக்கு** கம்பெனியின் பதிவு அலுவலகத்தில் நடைபெறும் என்று இதன்மூலம் அறிவிக்கப்படுகிறது.

இந்த அறிவிப்பு கம்பெனியின் வலைதளம் www.southernlatex.in மற்றும் பங்குகள் பட்டியலிடப்படும் பங்கு சந்தை வலைதளம் பிஎஸ்இ லிமிடெட் www.bseindia.com-ல் உள்ளது.

**சதர்ன் லாடெக்ஸ் லிமிடெட்டிற்காக**
ஒப்பம்/-
**கவிதா சி**
கம்பெனி செயலாளர் & இணக்க அதிகாரி
இடம் : சென்னை
தேதி : 18 ஜனவரி, 2023

**பெயர் மாற்றம்**

Given Name: Roshita
Sur Name:Nizar Ahmed தந்தை பெயர்: Nizar Ahmed பிறந்த தேதி: 29.11.2002, W 803, அக்ஷயா ஜனவரி தையூர் ரோடு, செங்கம்மாள், கேளம்பாக்கம், சென்னை–603 103, என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **Given Name: Roshita Ahmed Sur Name: Nizar Ahmed** என்று அழைக்கப்படுகிறேன்.

Given Name: Roshita
Sur Name:Nizar Ahmed

**பெயர் மாற்றம்**

MARTINA PATTERSON,
பிறந்த தேதி: 23.10.1975, F2, Dev Apartments, நெ.14, ஜெயராம் தெரு, திருவான்மியூர், சென்னை – 600041, என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **Martina Antionette Patterson,** என்று அழைக்கப்படுகிறேன்.

MARTINA PATTERSON

**பெயர் மாற்றம்**

Gopal Chowdary Laka Ram,
தந்தை பெயர்: Laka Ram, பிறந்த தேதி: 16.01.2000, நெ.75/37, திருப்பள்ளி தெரு, வால் டாக்ஸ் ரோடு, சௌகார்பேட்டை, சென்னை–600 001, என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **GOPAL KUMAR,** என்று அழைக்கப்படுகிறேன்.

Gopal Chowdary Laka Ram

**பெயர் மாற்றம்**

LOUIS PATTERSON,
பிறந்த தேதி: 07.08.1972, F2, Dev Apartments, நெ.14, ஜெயராம் தெரு, திருவான்மியூர், சென்னை – 600041, என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **LOUIS RICHARD PATTERSON,** என்று அழைக்கப்படுகிறேன்.

LOUIS PATTERSON

**பொது அறிவிப்பு**

சென்னை–600083, ஜாபர்கான்பேட்டை, சத்தியமூர்த்தி பிளாக், V.M.பாலகிருஷ்ணன் தெரு, நெ.A241 என்ற முகவரியில் வசிக்கும் எனது கட்சிக்காரர் திரு. S. கோபி, த/பெ. திரு.P.சங்குபிள்ளை, அவர்கள் இதனால் சகலமானவருக்கும் தெரிவிப்பது என்னவென்றால், எனது கட்சிக்காரருக்கு சொந்தமான கோடம்பாக்கம் கிராமத்தில் சர்வே எண்.394, சென்னை–78, கே.கே.நகர், 1வது செக்டர், 5வது தெரு, மனை எண். AP28க்கு விஸ்தீரணம் 880 சதுர அடிகள் கொண்ட மனை தொடர்பான முந்தைய அசல் ஆவணங்களான கோடம்பாக்கம் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட 17.01.1974 தேதியிட்ட கிரைய ஆவண எண்.59/1974 மற்றும் 21.05.1974 தேதியிட்ட கிரைய ஆவண எண்.2063/1974 ஆகிய 2 அசல் ஆவணங்களும் எனது கட்சிக்காரர் தனது வீட்டை கீழ்தளத்தில் இருந்து மேல் தளத்திற்கு ஷிப்டிங் செய்த போது தொலைந்து விட்டது. தேடிப்பார்த்தும் கிடைக்கவில்லை. மேற்சொன்ன ஆவணத்தை யாராவது கண்டெடுத்தால் உடனே கீழ்கண்ட முகவரிக்கு தெரியப்படுத்தவும். காணாமல் போன அசல் ஆவணங்களை பயன்படுத்தி யாராவது ஏதாவது வில்லங்கத்தை ஏற்படுத்தினால் அது என் கட்சிக்காரரின் உரிமையை எவ்விதத்திலும் பாதிக்காது என்பதை இதன் மூலம் அறியவும்.

**T.V.செல்வன், வழக்கறிஞர்**
**நெ.A272, V.M.பாலகிருஷ்ணன் தெரு,**
**சத்தியமூர்த்தி பிளாக்,**
**ஜாபர்கான்பேட்டை, சென்னை–600083,**
**செல் : 9841124958**